## 28. உள்வைப்பு.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

*பண் – பழம்பஞ்சுரம்.*

**உ**லகம் யாவும் படைத்தவனை யுகந்தெவ் வுலகும் புரப்பவனை
இலகு முயிருட் கலந்தவனை யெங்கு நீப்பின் றிருப்பவனை
நிலவு மயிலைப் பிடித்தவனை நிகரில் சிகண்டி யூர்பவனை
உலவா வெங்க ளுத்தமனை யுள்ளத் துள்ளே வைத்தேனே. 1

**கா**தற் கியைந்த காதலனைக் கருணைக் கடலைக் கண்மணியைச்
சீதப் பாலைத் தேங்கனியைத் தெவிட்டா வின்பத் தீஞ்சுவையை
ஆதிப் பெருமா னாயவனை யாறு முகத்துச் செம்மணியை
ஓதற் கரிய வெம்மானை யுள்ளத் துள்ளே வைத்தேனே. 2

**அ**ம்பொற் சிலம்பா ரடியழகை யடியா ரகத்தி னாரமுதைப்
பைம்பொற் கவலை காத்தவளின் பரிவுக் குவந்த கட்டிமுத்தைச்
செம்பொற் சோதிச் செழுங்குருந்தைத் திகழ்மாணிக்கத் திருவரையை
உம்பர்க் கருளெம் பெருமானை யுள்ளத் துள்ளே வைத்தேனே. 3

**தே**னிற் சிறந்த மொழியானைத் திருவிற் சிறந்த வுருவானை
வானிற் சிறந்த பதியானை மதியிற் சிறந்த பெரியானை
மானிற் சிறந்த விழியாளம் மலைமா தேந்தும் பைங்கிளியை
ஊனிற் போருயி ரெம்மானை யுள்ளத் துள்ளே வைத்தேனே. 4

---

*10.* ***மோதம்*** *= சந்தோஷம். (மோத:) மோதம் வடசொல்.*

*1.* ***உலவா*** *= ஒழியாத.*

**3. கவலை** = *செந்தினை ; "கவலை செந்தினையோர் வல்லி" என்பது* **வகரவெதுகை.**

அன்னைக் கனையா யுள்ளானை யயனுக் கயனா யிருப்பானைத்
தன்னைப் போலொன் றில்லானைச் சாவில் பிறப்பி னில்லானை
முன்னைப் பின்னைப் பிறழானை மூவா முருகப் பெருமானை
உன்னற் கரிய வெம்மானை யுள்ளத் துள்ளே வைத்தேனே. 5

மெய்யின் மெய்யாய் நிற்பவனை விரியு மகண்ட வெளியானைப்
பொய்யில் வேதப் பொறையாளர் போற்று மபேத வுணர்வானைச்
செய்ய கோழிக் கொடியானைச் சிறந்த ஞானத் திருவானை
உய்யு மாறெம் முத்தமனை யுள்ளத் துள்ளே வைத்தேனே. 6

செச்சைத் தாரார் மொய்ம்பானைத் திருமான் மருமா னென்பானை
இச்சைக் கலிக்கு ளாழ்ந்தோரை யெடுத்துக் கரையேற் றிகலானைப்
பிச்சைத் தலைவன் பிள்ளைதனைப் பிரமா பேணும் பேழ்மறையின்
உச்சிப் பொருளா மெம்மானை யுள்ளத் துள்ளே வைத்தேனே. 7

ஏட்டின் மொழிக ளளவின்றி யியம்பி யியம்பி முடிபுரையாத்
தாட்டி கந்தா னுடையானைச் சகல கலாவல் லோனையுயிர்
நாட்டி யஞ்செய் பவனையணு நடுவா னவனை நலிவிலருள்
ஊட்டி யெனையிங் காள்பவனை யுள்ளத் துள்ளே வைத்தேனே. 8

அரிய மாலிற் கரியானை யயனைச் சிறையிட் டருள்கோனை
நரியைப் பரியா வயர்ந்தவனை நமவென் றிறைஞ்ச விதித்தவனைப்
பெரியர்க் கருளும் பெரியானைப் பிறங்குங் கழுகு மலையானை
உரிமைப் படுமெம் பெருமானை யுள்ளத் துள்ளே வைத்தேனே. 9

வெள்ளிக் கயிலை மலைவாழ்வை வியனார் மோன ரகக்கழையைக்
கள்ளிற் பெரிய திருப்புகழைக் கழறி யிரியா வாக்கமுற்ற
வள்ளற் குள்ளங் குளிர்வித்த மழையா முகிலை வான்மணியை
உள்ளற் கரிய வெம்மானை யுள்ளத் துள்ளே வைத்தேனே. 10

மன்மத வருடம் ஆவணி மாதம் 18ஆம் தேதி சோமவாரம்.